**இரட்சகரின் இரட்சிப்பின் கீதங்கள் Vol-2**
**PART -1**
**கிறிஸ்துமஸ் கீத ஆராதனை**
**பாடல் - 1 & 14**

**பல்லவி**
மகிமையின் தேவன்
மனு உரு எடுத்தார்
மகிபனை கொண்டாடுங்கள் - இந்த
மனுகுலம் காக்க
தம்முடன் சேர்க்க
இரங்கினார் துதிபாடுங்கள்.

**அனு பல்லவி**
இதய தாகத்தின் இன்ப கீதங்கள்
சலங்கை ஓசையின் சங்கீதங்கள்
ஜதிகள் யாவும் துதிகளாகவே
அதிபர் இயேசு மகிமை கூறவே - மகிமை

**சரணங்கள்**
1.மங்கலங்கள் தங்கி வாழவே
மண்ணின் மாயை ஓடிப்போகவே
விண்ணை துறந்த தேவமைந்தனார்
என்னை மீட்க பாலனாகினார்.
விண்ணில் தூதரே
மண்ணில் ஆயரே
கூடி பாடினார் நேய மாகவே
எண்ணிலாத புதுமைகள் எல்லாம்
மண்ணில் வந்து சேர்ந்ததம்மா
விண்ணையந்த நீதியின் சூரியன்
மண்ணில் வந்து தவழ்ந்ததம்மா
தேவகோபம் இன்று மாறவே
சாபம்யாவும் ஓடிப்போகவே
புதுமைகளும் பிறந்ததுவே
பழமைகளும் ஒழிந்ததுவே - மகி

2.கிருபை பெற்ற மரியின் வாழ்விலே
பெருமை சேர்த்து மேன்மைப்படுத்தினார்
அலகை ஜெயித்து அகிலம் மீட்கவே
அடிமை உருவில் கருவு மாகினார்
நம்மை மீட்கவே
தம்மை தாழ்த்தியே
விந்தை பாலனாய்
கந்தை சூடியே
நிந்தை யாவும் போக்கிட வந்த
நிமிலன் தேவ மைந்தனம்மா
வாதை நீங்கி
பாவங்கள் போக்கிட
வந்த வல்ல ஈசனம்மா
தூய ஆவி தந்த ரூபமே
கன்னி மடியில் வந்த தீபமே
நிந்தைகளும் அழிந்ததுவே சிந்தைகளும்
தெளிந்ததுவே - மகிமை

**பாடல் - 2**

**பல்லவி**
தாவீதின் ஊரிலே
தாவீதின் மைந்தனாய்
ஏழையின் கோலமாய்
இயேசு பிறந்தாரே

**அனு பல்லவி**
நமக்கொரு பாலகன் பிறந்தார்
நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார்
கர்த்தத்துவம் அவர் தோளில் உண்டே
கவலைகள் நமக்கில்லையே - தாவீ

**சரணங்கள்**
1.வேதநாயகன் விந்தை பாலகன்
கந்தை பொதிந்தவராய் - நம்
நிந்தை சுமந்தவராய்
தந்தை சொற்படி தரணியில் வந்திட்ட
ராஜாதி ராஜனவர் - நம்
தேவாதி தேவனவர் - தாவீ

2.விண்ணில் தூதரும் மண்ணின் ஆயிரும்
கீதம் புகழ்ந்துவர - வான்
சாஸ்த்திரி தொடர்ந்து வர
ஆதாம் ஏவாளை வஞ்சித்த பேயின்
ஆதிக்கம் அழிப்பவராய் - தேவ
அவதாரம எடுத்தவராய்

3.கொட்டும் பனியிலே குளிரும் இரவினிலே
கோமகன் குடிலினிலே - ஏழை
மரியாள் மடியினிலே
ஆதி வார்த்தையாம் அதிசய மைந்தன்
கிருபை நிறைந்தவராய்
வழி சத்தியமானவராய் -

**பாடல் -3**

**பல்லவி**
ஆராதனை ஆராதனை
ஆராதனை
அன்பின் உருவே
அருளின் வடிவே
கருணை மலரே - உம்மை
காண வருகிறேன் -அன்

ஆராரிரோ - ஆராரிரோ
ஆராரோ ஆராரோ ஆராரிரோ
ஆராரிரோ

**சரணங்கள்**
1. பூத்துக் குலுங்கும் வான மீன்கள்
வண்ணம் தீட்டவோ
காத்துக் கிடக்கும் வான தூதர்
வாழ்ந்து பாடவோ - உம்மை
வாழ்த்திப் பாடவோ - அன்பே ஆராரிரோ

2. கந்தை துணியில் உந்தன் விந்தை
காணக் கிடைக்குமோ
கண்ணால் தெரியும் உந்தன் உலகை
கண்டு ரசிக்கவோ அதை
கண்டுருசிக்கவோ - அன்பை ஆராரிரோ

3 ராஜ பூரிகை ஏதுமிங்கில்லை
ராஜன் பிறந்தாரோ
கூடகோபுரம் ஒன்றுமே இல்லை
குடிசையில் தானோ - ஓலை
குடிசையில் தானோ - அன்பே - ஆராரிரோ



பாடல்-4

பல்லவி
விண்ணகமோ மண்ணகமோ
நான் வியந்து போனேன்
என்னகத்தை தேடி வந்த
இயேசு திரு பாலனே
துதிக்கின்றேன் நானே - வின்

அனு பல்லவி
நதியை தேடிவந்த கடலோ
கடலில் பூத்திருக்கும் மலரோ
ஒரு மலரில் நூறுவகை மணமோ
நான் காண்பதெல்லாம் அதிசயமோ

1.மேகத்தில்லே மேடைபோட்டு பாடும் தூதர் கானங்கள்
ஏழு சுரங்கள் போதாதென்று எழுதிடாத ராகங்கள்
கோடி கோடி நட்சத்திரம் கும்மாலம் பாடுதம்மா
மகிபனின் பிற்நத நாளை கொண்டாடி மகிழுதம்மா
இனிவரும் நாளெல்லாம் இயேசுவால்
திரு நாளம்மா-வின்

2. செல்லப்புதல்வன் கோலம்காண வல்லபிதா வந்திருக்க
கேரூபினும் சேராபினும் ஓயாமல் துதித்து நிற்க
கோடி கோடி தூதர்களும் கொட்டகையில் கூடிவர
வானமண்டலங்கள் யாவும் விழாக்கோலம் கொண்டிருக்க
மகிமையின் ஸ்தலமென மாட்டுத்தொழுவம் ஆனதம்மா

3. ஆதி சருவேசனே அகிலத்தை படைத்தோனே
அந்த மொன்று மில்லாத அற்புதசர்குணனே
வான் வீதி அளந்தவனே வல்ல பிதாசுதனே
நீதியின் சூரியனே நிகரில்லா பரிசுத்தனே
ஈசனும் நேசனும் எனக்கென்றும் நீர்தானையா - வின்

பாடல் - 5

பல்லவி
சின்னஞ்சிறுபாலனே
கன்னி மரி மைந்தனே
எங்களை மீட்க வந்த இயேசு ராஜனே
பரலோகம் தந்தவரே
பாரினிலே வந்தவரே
உந்தனின் பாதம் தேடி சரணடைகிறோம்
ஏசையா மேசியா
உந்தனது சன்னதி ஒன்றே போதுமையா
பாடுவோம் போற்றுவோம்
ஆடுவோம் அகமகிழ்வோம் .. சின்ன

சரணங்கள்
1 வானம் பூமி படைத்தவர்க்கு வாழ ஒரு இடமில்லை
புல்லனையிலே புனிதன் பிறந்தார்
ஞானம் தந்த தேவனுக்கு தானம் செய்ய யாருமில்லை
கந்தை துணியிலே கர்த்தர் தவழ்ந்தார்
உலக மேன்மையை குப்பை யாக்கினார்
தாழ்மை கோலம் தாமெடுத்து மேன்மை படுத்தினார் - சின்ன

2. ஆதிவார்த்தை அமலனுக்கு ஆதரிக்க யாருமில்லை
ஆகமங்களின் அற்புதனவரே
மேக ஸ்தம்பம் ஆனவர்க்கு மேன்மை இங்கு ஏதுமிலை
அரிய பெருமைகள் அனைத்தும் துறந்தார்
வார்த்தை யானவர் மாமிசமானார்
கிருமைப சத்யம் நிறைந்தவராய் மனு உருவானார்-
சின்ன

3. இக்கட்டிலே வாழுகின்ற எண்ணிலாத மாந்தர்களே
எழுந்து வாருங்கள் மகிழ்ந்து கூடுங்கள்
கட்டுகளை அவிழ்த்துவிட கர்த்தர் இயேசு உதித்து விட்டார்
களி கூர்ந்திடுங்கள் துதி பாடிடுங்கள்
மேன்மை தங்கிய மேசியா இவரே
மேரிமைந்தன் வரவுக்காக ஆர்பரியுங்கள் - சின்ன

பாடல் - 6
பல்லவி
நம்பிக்கையின் தெய்வம் - உன்
இயேசு வென்றறிவாயா
நாளெல்லாம் அவர்கண்கள் - உன்னை
காண்பதை உணர்வாயா - நம்பி
சரணங்கள்
1. நடந்தாலும் நீ விழுந்தாலும்
அவரின் பிள்ளை தான்
விழுந்தாலும் மீண்டும் எழுந்து
நீ நடக்க உதவுவார் - நம்பி

2. கலங்காதே நீ திகையாதே
உந்தன் தேவன் நானென்று
வழுவாமல் உன்னை காக்கும்
அந்த கர்த்தர் சொல்கிறார் - நம்பி

3. மரித்தாலும் உயிர்பிழைப்பான்
தூய மகிமை தேவனால்
பசித்தாலும் அவன் பிழைப்பான்
அவர் ஜீவ வார்த்தையால் - நம்பி

பாடல் - 7

பல்லவி
ஆயிரம் நாவுகள் போதாதையா - உந்தன்
அதிசய வரவை சொல்லிவிட
வானிலும் பூமிலும் உயர்ந்தவரே
வல்லமையில் அதி சிறந்தவரே

சரணங்கள்
1.தேவபிதாவின் திருகுமரா .... ஆ
ஆ... ஆ... ஆ...
தந்தையின் மகிமையில் மகிழ்ந்தவரே
ஈசனாய் இருந்தும் நீசனை நினைத்து
பாசமாய வந்த பரிசுத்தனே .... ஆயிரம்

2. வானமும் பூமியும் படைத்தவரா ... ஆ
ஆ... ஆ... ஆ...
கன்னியிடம் வந்த சிறுகருவா
படையினை நினைந்து இழிநிலை உணர்ந்து
படைப்பினுக்காக படைப்பாவதா... ஆயிரம்

3. ஆதி அந்தமில்லா அற்புதரா .... ஆயிரம்
ஆ.. ஆ... ஆ...
அடியார்களை தேடும் தர்பரரா
திருத்துவ தேவனின் ஒரு பகுதி
தீயவன் எனக்காய் மனுவாவதா. .. ஆயிரம்

பாடல் - 8 & 13

**பல்லவி**
காணாமல் போனேனே நானே
கருத்தோடு தேடினீர் நீர் தானே
உம்மோடு நான் பேச வேண்டும்
உள்ளுக்குள் உறவாட வேண்டும்
உள்ளத்தில் உறவாட வேண்டும் - காணாமல்

**சரணங்கள்**
1. அலைமோதிடும் தடுமாறிடும்
உழையான என் வாழ்விலே
நலையானது நீங்காதது
அன்பே உன் சகவாசமே
அன்பே உன் சகவாசமே - காணாமல்

2. விலையற்றது பிழையற்றது
உம் இரத்தம் எனை மீட்டது
நீர் எங்கேயோ நான் அங்கேதான்
வரவேண்டும் என் நேசரே
வரவேண்டும் என் நேசரே - காணாமல்

3. உதவாதது உயர்வற்றது
என் வாழ்வு மலிவானது
பிழையானது சுவையற்றது
என்றாலும் உமதானது
என்றாலும் உமதானது - காணாமல்

பாடல் - 9

**பல்லவி**
இருள் நீக்கும் விடிவெள்ளியே - என்
இடர் நீக்க வந்த என் செல்வமே
உன் பார்வை பட்டாலே போதும்
என் பாவம் எல்லாம் மாறும்... தீரும்

**சரணங்கள்**
1. பாலை வனத்தை கடந்தேன் - என்
பாதை அருகே நீர் ஊற்றாநீர்
கல்லும் முள்ளும் தைக்காமல் - என்
கானக பாதையில் காத்துக் கொண்டீர்
எனக்குள் வாழ பிறந்தவரே
ஏழ்மை கோலம் எடுத்தவரே - இருள்

2. நேசிக்கும் ஜீவன் நீர்தானே - உன்
நேசமே எனது ஆதாரமே
வாசிக்கும் வேதம் நீர்தானே - உம்
வார்த்தையே எனது உணவானதே
யாசித்தேன் உமது கிருபைகளை
யோசிப்பேன் நீர் செய்த நன்மைகளை -இருள்

3. பெத்லேம் சத்திரம் முன்னனையில்
இந்தரை மீட்டிடும் ஞானபரன்
சிங்காசனத்தை துறந்தவராய்
சியோன் மனவாட்டி நினைந்தவராய்
அன்னை மரியின் பாலகனாய்
அன்பின் வடிவ துாயவனாய் - இருள்

பாடல் - 10

**பல்லவி**
மகத்துவரே மாதேவனே
ஆராதனை ஆராதனை
மணவாளரே துணையாளரே
ஆராதனை ஆராதனை - மக

**சரணங்கள்**
1. ஜீவ தேவனே ஆராதனை
தேவ ஆவியே ஆராதனை
வல்ல ராஜனே நல்ல ஆயனே
அனைத்துமானவரே ஆராதனை

2. எந்தன் தஞ்சமே ஆராதனை
எந்தன் கோட்டையே ஆராதனை
எந்தன் கீதமே பாதை தீபமே
என்றும் வாழ்பவரே ஆராதனை
என்றும் வாழ்பவரே ஆராதனை - மகத்துவ

3. கன்மலையே உமக்கு ஆராதனை
காண்பவரே உமக்கு ஆராதனை
ஆவியானவரே அபிஷேகநாயகரே
அனைத்துமானவே ஆராதனை
அனைத்து மானவரே ஆராதனை - மகத்துவ

சாதிகளே எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்,
ஜனங்களே எல்லாரும் அவரைப் போற்றுங்கள்
அவர் நம்மேல் தைத்த கிருபை பெரியது.
கர்த்தரின் உண்மை என்றென்றைக்கும்
உள்ளது
அல்லேலுயா - சங்கீதம் - 117/1

எங்கள் தொடர்பு முகவரி
**THE VOICE OF GOD**
**A-56, JAI NAGAR,**
**THIRUVARUMPUR,**
**TRICHY - 620 013.**
Ph: 0431 - 2510949

குறிப்பு:

C.D. &CASSETE வாங்கும் பொழுது *GAPA*
HOLO GRAM ஒட்டப்பட்டிருக்கிறதா என்று சோதித்து
ஒரிஜினல் C.D.வாங்கவும்